**OS.No**. 38/2017 ரெத்தினசாமி த/பெ. ராமசாமி

**PW**1 நாள். 05.09.2022

வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**தாவா சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.** 635 **ஆனது** 2014 **லேயே துண்டிக்கப்பட்டுவிட்டது என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ** 17 **வரிசையின் கீழ் நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீதுகள் என் தாயாரால் செலுத்தப்பட்டவை என்றால் சரியல்ல.** 21.07.2011 **தேதியில் என்னுடைய தகப்பனார் எழுதிவைத்த தான செட்டில் மெண்ட் பத்திரப்படி என்னுடைய தாயார் தான் சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் இருந்தது.** 2009 **ல் என்னுடைய தகப்பனார் அடமானம் வைத்த சொத்தானது** 2017 **வரை அடமானத்தில் தான் இருந்தது.** 22.11.2016 **தேதியில் என்னுடைய தாயார் அசல் வழக்குஎண்** 100/2017 **ல் வாதியான தயாநிதி பெயருக்கு தானசெட்டில் மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் ஏற்கெனவே** 2011 **ல் நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான செட்டில் மெண்ட் எழுதிவைத்துள்ளார். பின்னிட்டு வங்கியில் அடமானம் எழுதிவைத்துள்ளதை மறைத்து மோசடியாக பல்லடம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மற்றொரு தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் தான செட்டில் மெண்ட் பத்திரமானது தயாநிதி பெயருக்கு என்னுடைய தாயார் சரஸ்வதி மற்றும் சகோதரி சுமதி சேர்ந்து எழுதிவைத்துள்ளார்கள் என்றால் அது மோசடியானது. அது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் தான் என்றாலும் வழக்கிற்காக மோசடியாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.** 25.11.2016 **தேதியில் என்னுடைய தாயார் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் தொழில் சம்பந்தமாகவும் பொது சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள உரிமை சம்பந்தமாகவும் தயாநிதி பெயருக்கு ஒரு வர்த்தமான கடிதம் எழுதியுள்ளார் என்றால் அது மோசடியானது. தான செட்டில் மெண்ட் எழுதிய பிறகு தயாநிதிதான் தாவாசொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில்** 3 **மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் அது தெரியவில்லை.நான் தாவா சொத்தில் தயாநிதி அனுபவத்தில் இடையூறு செய்ததால் தான் அவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.** 100/2017 **யை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்கள்.** 38/2017 **மற்றும்** 98/2021 **ஆகியவை**

தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் அசல் வழக்கு எண்.100/2017 ன்படி தீர்ப்பளிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சர்வே நம்பர் 207/1A யில் 1 ஏக்கர் 45 செண்டும் 207/1B யில் 5 செண்டும் என்னுடைய அப்பா ராமசாமி பெயரில் கிரையப்பத்திரம் இருந்தது என்றால் ஆமாம். அவர் பிரின்ஸ் டையிங் என்ற பேக்டரி நடத்தி வந்தார் என்றால் அதில் நானும் அவரும் பங்குதாரர்கள். மேற்படி பிரின்ஸ் டையிங் பேக்டரிக்காக 7ம் பிரதிவாதி வங்கியில் லோன் பெற்றிருந்தார் என்றால் ஆமாம். மேற்படி கடனுக்காக மேற்படி சொத்தை அடமானம் வைத்திருந்தார் என்றால் ஆமாம். மேற்படி பிரின்ஸ் டையிங் நிறுவனமானது 7ம் பிரதிவாதி வங்கியில் வாங்கியிருந்த கடனை அடைத்து விட்டது என்றால் ஆமாம். கடனை அடைத்து விட்டதால் அடமானம் முறிந்துவிட்டது என்றால் ஆமாம். வங்கியில் பெற்ற அடமானம் முறிந்து விட்டதால் எனக்கும் என்னுடைய குடும்பத்தாருக்கும் ஆன சொத்துபிரச்சனையில் 7ம் பிரதிவாதி வங்கிக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரின்ஸ் டையிங் நிறுவனமானது பங்குதாரர் நிறுவனம் என்பதை மறைத்து உரிமையாளர் நிறுவனமாக காட்டி கடன்பெற்றுள்ளதால் 7ம் பிரதிவாதி வங்கியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். 7ம் பிரதிவாதி வங்கியானது மோசடியாக பிரின்ஸ் டையிங் நிறுவனமானது பங்குதாரர் நிறுவனம் என்பதை மறைத்து உரிமையாளர் நிறுவனமாக காட்டி ஆவணங்கள் தயார் செய்துள்ளதாக நான் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பிரின்ஸ் டையிங் நிறுவனமானது தனி நபர் நிறுவனமாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் அதனால் தான் அதனை குறிப்பாக வாதுரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொத்தை அடமானம் வைத்ததால் தான் 7ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துள்ளதாக வாதுரை 8ம் பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. 7ம் பிரதிவாதி வங்கிக்கு எதிராக ஏதாவது பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 7ம் பிரதிவாதி வங்கி மீது எந்த சட்டப்படியான குறைபாடு எதுவும் இல்லை என்பதால் தான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 7ம் பிரதிவாதி வங்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும்வங்கி தேவையற்ற தரப்பினர் என்பதால் 7ம் பிரதிவாதி வங்கியை பொறுத்து செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி வங்கியான கார்ப்பரேசன் வங்கியானது தற்போது யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியுடன் இணைக்கப்பட்டுவிட்டது என்றால் அந்த விபரம் தெரியும். 7ம் பிரதிவாதி வங்கியின் பெயரை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற

காரணத்தினாலும் 7ம் பிரதிவாதி வங்கிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**அசல்வழக்கு எண் 98/2021 ல் 8ம் பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை**

பிரின்ஸ் டையிங் நிறுவனமானது இறந்து போன ராமசாமி என்பவருடைய உரிமையாளர் நிறுவனம் என்றால் சரியல்ல பங்குதாரர் நிறுவனம். பொது சுத்திகரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் படி உரிமையாளர் நிறுவனமாகத்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் மீண்டும் பங்குதாரர் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்து என்னுடைய அப்பா ஆவணங்கள் கொடுத்தார். ஆனால் அதில் மாற்றம் செய்யவில்லை. என்னுடைய அப்பா தாக்கல் செய்ததாக கூறப்படும் ஆவணங்களின் அலுவலக நகல் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் மட்டும் தான் உள்ளது என்றால் தாக்கல் செய்யவில்லை.என்னை பங்குதாரராக அங்கீரித்து 8ம் பிரதிவாதி நிலையத்திலிருந்து கடிதம் ஏதாவது அனுப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் என்னை பங்கு தாரராக அங்கீகரித்து தேர்ததில் வாக்களிக்க அனுமதித்துள்ளார்கள். அவ்வாறு என்னை பங்கு தாரராக அங்கீகரித்து தேர்ததில் வாக்களிக்க அனுமதித்துள்ளதை காட்ட ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வாசாஆ 16 மற்றும் 21ல் நான் பங்குதாரர் என்பதற்கான விபரம் எதுவும் இல்லை என்றால் ஆமாம். என்னுடைய அப்பாவும் பங்குதாரர் என்று இல்லை. ராமசாமியின் வாரிசுகள் அனைவருக்கும் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் சாயக்கழிவுகளை சுத்திகரிக்க உரிமை உள்ளது என்றாலும் எனக்கு மட்டும் உரிமை உள்ளதாக கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை</u>**

என்னை பங்கு தாரராக சேர்க்க என்னுடைய அப்பா கொடுத்த ஆவணங்கள் பொது சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ளது என்றால் ஆமாம். நான்பொது சுத்திகரிப்பு நிலைய இயக்குநர் தேர்தலில் வாக்களித்தற்கான ஆவணங்களும் மேற்படி நிலையத்தில் உள்ளது என்றால் ஆமாம்.

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/- M. மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.